பக்கங்கள்: 06

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:09 | 10.11.2023 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2053

# இலங்கை கிரிக்கெட்டுக்குத் தடை?

இந்தியாவுடன் இணைந்து இலங்கை கிரிக்கெட்டை தடை செய்வதற்காக சதித்திட்டம் தீட்டப்படுவதாக இன்றைய பாராளுமன்ற அமர்வின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றைய பாராளுமன்ற விவாத்தின் பின் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிதியில் இயங்கும் பிரபல விடுதி ஒன்றில் இரகசிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. அந்தச் சந்திப்பின் போதே குறித்த சதித்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் நிர்வாகி ஷாவிடம் கோரிக்கை விடுத்து நாற்பத்தெட்டு அல்லது எழுபத்தி இரண்டு மணி நேரத்திற்குள் இலங்கை கிரிக்கெட் சர்வதேச அளவில் தடைசெய்ய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் மீதான அழுத்தம் அதிகரித்தமையாலேயே இலங்கை கிரிக்கெட் அணி மீதான சர்வதேச தடையொன்றை மேற்கொள்ள முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

சஜித்தின் குற்றச்சாட்டுக்கு பதிலளித்த விளையாட்டுத்துறை அமைச்சர், சில காரணங்களால் இலங்கைக் கிரிக்கெட் தடை செய்யப்பட்டால் 6 மாத காலத்திற்கு அர்ஜூன ரணதுங்கவிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு உத்தியோகபூர்வ தேர்தல் நடத்தப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செல்லவுள்ளோம்.

அங்கு நீதியை எதிர்பார்க்கிறோம். சட்டமா அதிபர் மீதிருந்த நம்பிக்கையுடைந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

## 16 வருடங்களின் பின்னர் விடுதலையான சந்தேக நபர்கள்

*2006 ஆம் ஆண்டு இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் பயணித்த வாகனத்தொடரணி மீது நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரையும் விடுதலை செய்ய கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைத்த குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத காரணத்தால் அவர்கள் விடுவிக்கப்படுவதாக நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.*



யோகராஜா நிரோஜன், கரன் எனப்படும் சுப்பிரமணியம் சுரேந்திர ராஜா மற்றும் கனகரத்தினம் ஆதித்தியன் ஆகிய மூன்று பிரதிவாதிகளும் ஏறக்குறைய 15 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்ததாக சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 ஆம் திகதி வாகனத்தொடரணி மீது குண்டுவீசி தாக்குதல்.....

(பக்:02)

## ஜோர்தானில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை இளைஞர்கள்

ஜோர்தானில் விஸா காலாவதியான சுமார் 100 இலங்கை இளைஞர்கள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் இந்த இலங்கையர்களின் விஸா காலாவதியாகியுள்ள போதிலும், அவர்களை நாட்டுக்கு அனுப்ப அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனகூறப்படுகின்றது. நிறுவனம் தமது சம்பளத்தை வழங்காமல் தமது சேவைகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதனால் தாம் மீண்டும் இலங்கைக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளதாக தெரிகின்றது.

அங்கு பணிபுரியும் இலங்கையர்கள் பலர், இது தொடர்பில் இலங்கையில் உள்ள தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

**‘பேசாப் பொருளையும் பேசும் குரல்’**

# தனியார் துறைக்கு 20 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறை, பெருந்தோட்டத் துறை மற்றும் அரை அரசு ஊழியர்களுக்கு மாதாந்தம் 20,000 ரூபா கொடுப்பனவு வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென தேசிய தொழிலாளர் சபை பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

அவ்வாறான கொடுப்பனவு வழங்கப்படாவிடின் அதற்காக அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க நேரிடும் என அனைத்து தொழிற் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

“இந்தக் கோரிக்கைகளுக்கு செவி சாயுங்கள். இல்லை என்றால் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தின் முன் வருவோம். நாட்டில் உள்ள மற்ற தொழிற்சங்கங்களுடன் இணைந்து செயல்படுவோம்.”

இதேவேளை, இலங்கையில் மிகவும் ஆதரவற்றவர்களாக தோட்டத் தொழிலாளர்கள் உள்ளதாக இலங்கை பெருந் தோட்ட சேவைகள் சங்கத்தின் பிரதித்தலைவர் எஸ். சந்திரன் தெரிவித்தார்.

# தேங்கியுள்ள தபால் பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை

தபால் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்திருந்த 48 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், இன்று முதல் தமது கடமைகளை வழமைபோல முன்னெடுக்கவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

அடையாள பணிப்புறக் கணிப்பு காரணமாக தேங்கியுள்ள 10 லட்சம் தபால் பொருட்களை விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் நுவரெலியா, கண்டி தபால் அலுவலகங்களை தனியார் தரப்பினருக்கு வழங்கும் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தபால் தொழிற்சங்கங்கள் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## 16 வருடங்களின் பின்னர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தி அப்போதைய பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் பசீர் அலி முகமதுவை படுகொலை செய்ய சதி செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட போது மூவரும் கைது செய்யப்பட்டனர்.

# ரவிராஜின் 17 ஆவது நினைவு நாள் உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் 17ஆவது ஆண்டு நினைவு இன்று வெள்ளிக்கிழமை காலை, தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக உள்ள அவரது நினைவுச் சிலை முன் பாகவே நடைபெற்றது.

மாமனிதர் ரவிராஜின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, அரசியல் சமூக செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிசோர், ரவிராஜின் உறவினர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இந்தியாவில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர்

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்டனி பிளின்கன் தனி விமானம் மூலம் டெல்லி விமான நிலையத்தில் இறங்கினார்



ஏற்கெனவே அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் இந்தியாவில் நிற்கிறார். இவர்கள் இருவரும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரை முறையே சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளனர்.

# உலகம் முழுவதும் வெறுப்பு அதிகரித்து வருகிறது - ஐ.நா.தலைவர்

உலகம் முழுவதும் வெறுப்பு, வெறுப்பு தொடர்பான பேச்சுகள், குற்றங்கள் ஆகியவை அதிகரித்து வருவதாக ஐ.நா பொதுச்சபையின் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் கவலை தெரிவித்துள்ளார். வெறுப்புப் பேச்சுகள் வலி மிகுந்த காயங்களை ஆழமாக்குவது மட்டுமின்றி மோதல்களையும் புரித லின்மைகளையும் தீர்க்க முடியாது என்கிற அவநம்



பிக்கையின் சுழற்சியையும் தூண்டுகிறது. ஆக்கபூர்வமான உரையாடல்களால் மட்டுமே, அனைத்து மக்களிடையே நல்லிணக்கம், பரஸ்பர புரிதல் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்த முடியும். எனவே, வெறுப்பு மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் இவ்வாறு டென்னிஸ் பிரான்சிஸ் அந்தக் காணொலியில் தெரி வித்துள்ளார்.

## அமெரிக்காவில் இந்திய மாணவர் கொலை

அமெரிக்காவில் 24 வயது இந்திய மாணவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். தெலங்கானா மாநிலம் கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் வருண் ராஜ் புச்சா. இவர் கடந்த 2022 ஆகஸ்டில் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். வால்ப ரைஸோ பல்கலைக் கழகத்தில் கணினி அறிவியல் பயின்றுவந்த மாணவர் கடந்த ஒக்ரோபர் 29 ஆம் திகதி கொலைவெறித் தாக்குதலுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்றுவந்தார். இந்நிலையில், அவர் நேற்று சிகிச்சைப் பலனின்றி இறந்தார்.

# ஜப்பான் அருகில் தோன்றிய புதிய தீவு



தெற்கு ஜப்பானில் ஐவோ ஜிமா என்ற பகுதியில் திடீரென கடந்த மூன்றுவாரங்களுக்கு முன்னர் கடலுக்கு அடியில் பயங்கரமான எரிமலை வெடித்தது. கடலுக்கு அடியில் வெடித்த இந்த எரிமலை 10 நாட்கள் இருந்த நிலையில் சாம்பல், பாறைகள் ஆகியவை தோன்றி கடலுக்கு மேலாக ஒரு தீவு போல காட்சியளிக்கிறது. இந்தத்தீவு 100 மீற்றர் விட்டம் மற்றும் 20 மீட்டர் உயரத்தோடு இருப்பதாகவும் இந்தத் தீவு அப்படியே நிலையாக இருந்தால் நிரந்தரமான தீவாக மாறிவிடும் என்று கூறப்படுகிறது.

# காஸாவில் நான்கு மணிநேர யுத்த நிறுத்தம்

தினமும் நாளும் சண்டையில் நான்கு மணிநேர மனிதாபிமான இடைநிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொண்டுள்ளது, வடக்கு காஸாவில் உள்ள பாலஸ்தீனியர்களை வெளியேற்ற அனுமதிக்கிறது என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது. ஆனாலும், இஸ்ரேலிய பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு எந்த இடைநிறுத்தங்களும் முழுப் பகுதியிலும் இருக்காது என்று தெரிவித்தார். மனிதாபிமான இடைநிறுத்தங்கள் போதாது என்று தொண்டு நிறுவனங்கள் கூறியுள்ளன. "மதியம் குண்டு வீசப்படுவதற்கு முன்பு சமூகங்களுக்கு காலையில் உணவு வழங்குவதற்கு ஒவ்வொரு நாளும் நான்கு மணி நேர இடைநிறுத்தத்தால் என்ன பயன்?"என ஆக்‌ஷன் எய்ட் கேள்வி எழுப்பியுள்ளது.

## அப்பிள் இணை நிறுவனத்தின் உடல்நிலை பாதிப்பு

அப்பிள் நிறுவனத்தின் இணை நிறுவனர் ஸ்டீவ் வோஸ்னியாக், மெக்சிகோவில் நடைபெற்ற உலக வர்த்தக கூட்டமைப்பின் நிகழ்ச்சியில் பங்கேற்றார். உள்ளூர் நேரப்படி மாலை 4:20 மணிக்கு மாநாட்டில் அவர் பேச திட்டமிடப்பட்டிருந்தது ஆனால், திடீரென அவருக்கு உடல்நிலை குறைபாடு ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். 73 வயதான ஸ்டீவ் வோஸ்னியாக்கிற்கு ஸ்ட்ரோக் ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் தீவிரபாதிப்பு எதுவுமில்லை என நம்பப்படுகிறது. நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் யாரும் இது தொடர்பாக, இதுவரை எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

# மரம் நடும் தினத்தில் கென்யாவில் விடுமுறை

நாடு தழுவிய மரம் நடும் தினமான நவம்பர் 13 ஆம் திகதி கென்யாவில் பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2032க்குள் 15 பில்லியன் மரங்களை நடுவதற்கான கென்யாவின் லட்சியத் திட்டத்தின் ஒரு பகுதியாக மரம் நடும் தினம் கொண்டாடப்பட உள்ளது. ஊடகங்களில் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிவிப்பின் மூலம் அறிவித்தார். "அரசாங்கம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஒரு சிறப்பு விடுமுறையை அறிவித்துள்ளது, இதன் போது நாடு முழுவதும் உள்ள பொதுமக்கள் காலநிலை மாற்றத்தின் பேரழிவு விளைவுகளிலிருந்து நம் நாட்டைக் காப்பாற்றும் தேசிய முயற்சிகளுக்கு தேசபக்த பங்களிப்பாக மரங்களை நடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று உள்துறை அமைச்சர் கித்துரே கிண்டிகி, சமூக ஊடகங்களில் தெரிவித்துள்ளார். கென்யாவின் காடுகளின் பரப்பளவு சுமார் 7% ஆக உள்ளது, ஆனால் அரசாங்கம் இந்த நிதியாண்டில் $80m (+65m) க்கும் அதிகமாக ஒதுக்கியுள்ளது,

## போத்துக்கலில் அடுத்த ஆண்டு தேர்தல்

ஊழல் விசாரணையில் உள்ள பிரதமர் அன்டோனியோ கோஸ்டா செவ்வாய்க்கிழமை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெறும் என ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டி சௌசா, வியாழக்கிழமை அறிவித்தார்.

# நாம் நினைத்ததைவிட சூரியன் பெரியதல்ல

சூரியன் நாம் நினைத்ததைவிட பெரியது கிடையாது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். டோக்கியோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த வானியல் வல்லுநர் மசாவோ தகாடா, கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டக்ளஸ் கோப் ஆகியோர் நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது.



"சூரியனின் ஆரம் (ரேடியஸ்) முந்தைய பகுப்பாய்வுகளைக் காட்டிலும் சில நூறு சதவிகிதம் மெலிதாக இருப்பதாகக் கண்டறிந்துள்ளனர். அதில் சூரியனின் சூடான பிளாஸ்மா உட்புறத்தில் உருவாக்கப்படும் ஒலி அலைகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டது. இது அழுத்தம் அல்லது பீ-முறைகள் என்று அழைக்கப்படுகிறது. மற்ற ஒலி அலைகளுடன் ஒப்பிடும்போது சூரியனின் உட்புறத்தை இயக்க ரீதியாக மிகவும் வலுவாகக் கண்டறிந்த பீ-முறைகள் உதவுகின்றன.

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# சதிவலையில் இலங்கை கிரிக்கெட்

**இலங்கை கிரிக்கெட் அணியின் தோல்வியின் பின்னணியில் குழு ஒன்று இயங்கியது. அந்தக் குழு இலங்கை கிரிக்கெட்டைக் கைப்பற்ற முயற்சித்து வருகிறது. இது தொடர்பான அனைத்து உண்மைகளும் இரண்டு நாட்களில் பொது ஊட கங்களுக்கு முன்பாக அறிவிக்கப்பட்டு, இலங்கை மக்களுக்கு தெரியப்படுத்தப்படும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் தெரிவுக்குழு தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க இன்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தெரிவித்தார்.**

**இலங்கை கிரிக்கெட் அணியினர் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். அவர்களை வரவேற்க இலங்கை கிரிக்கெட் அதிகாரிகள் பலர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் காத்திருந்தனர். அவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்படுவதற்கு பொது பஸ் ஒன்று தயார் செய்யப்பட்டிருந்த போதிலும் பல வீரர்கள் தங்களது சொந்த வாகனங்களில் தங்கள் வீடுகளுக்கு புறப்பட்டுச் சென்றனர்.**

**அர்ஜுன தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி சம்பியன் கிண்ணத்துடன் இலங்கைக்கு வந்த போது கொடுக்கப்பட்ட வரவேற்பு கண் முன்னால் நிழலாடுகிறது. இலங்கை அணியின் மோசமான தோல்வியை ரசிகர்கள் எதிர்பார்க்கவில்லை. அதனால் வரவேற்கும் மனநிலையில் அவர்கள் இல்லை. உலகத்தில் உள்ள பிரபலமான விளையாட்டு ரசிகர்கள் இதே மன நிலையில் உள்ளனர். உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கோலைத் தடுக்க முற்பட்டபோது தவறுதலாக எதிரணிக்கு கோலை தாரை வார்த்த சம்பவங்கள் உள்ளன. உலகக்கிண்ணப் போட்டியில் அப்படியான ஒரு கோலைக் கொடுத்தவர் நாடு திரும்பிய போது சுட்டுக் கொல்லப்பட்டார்.**

**இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கிரிக்கெட் வீரர்களின் வீடுகள் எரிக்கப்பட்டன. அப்படியான ஒருநிலை இலங்கையில் ஏற்படவில்லை. இலங்கை கிரிக்கெட் அலுவலகத்துக்கு முன்னால் பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதால் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால், இரண்டொருவர் அங்கு கூடிவிட்டுக் கலைந்துள்ளனர்.**

**இலங்கை அணி வீரர்கள் காசுக்கு ஆசைப்பட்டு விளையாடுகிறார்கள் என முன்னாள் வீரர் முரளிதரன் குற்றம் சாட்டியுள்ளார். நாங்கள் விளையாடும் போதெல்லாம் நாட்டுக்காக விளையாடுகிறோம் என்ற உணர்வு இருந்தது. அது தற்போது துளியும் இலங்கை அணி வீரர்களுக்கு இல்லை. அனைவரும் தற்போது பணத்திற்காக தான் விளையாடுகிறார்கள். நாட்டிற்காக சிறப்பாக விளையாட வேண்டும் என்ற எண்ணம் மாறி பணத்தைத் தேடி வீரர்கள் செல்லத் தொடங்கி விட்டார்கள். இப்போது ஒரு டெஸ்ட் போட்டி விளையாடினால் இலங்கை அணி வீரர்களுக்கு 25 லட்சம் இலங்கை காசுகள் சம்பளமாகக் கிடைக்கிறது. ஆனால் நான் 1992 ஆம் ஆண்டு விளையாடும்போது வெறும் 2000 ரூபாய் தான் இலங்கை காசு கிடைத்தது. ஆனால், நாங்கள் பணத்திற்காக விளையாடவில்லை. நாட்டுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்று விளையாடினோம்.**

**தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேல் விளையாடிய பிறகுதான் எங்களுக்கு பணம் கிடைத்தது. தற்போது உள்ள இளைஞர்களுக்கு ஆரம்பத்திலே பணம் மீது நாட்டம் வந்து விட்டதால் அவர்கள் பேட்டிங்கை மறந்து விடுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பல வெளிநாட்டு தொடர்களில் அதிக பணம் கிடைக்கிறது என்பதற்காக அதைத் தேடி செல்கிறார்கள். நாட்டை அனைத்து வீரர்களும் விட்டு விடுகிறார்கள். இதனால்தான் நான் சொல்கிறேன், இந்தியா இந்த விடயத்தில் சிறப்பாக நடந்து கொள்கிறது. ஐ.பி.எல் தொடரில் மட்டும் தான் விளையாட வேண்டும் என்ற விதியை அந்நாட்டு வீரர்களுக்கு இந்தியா விதித்து இருக்கிறது. இதேபோல் ஒரு முடிவை இலங்கையும் கொண்டு வர வேண்டும். இலங்கை பிரிமீயர் லீக் தொடரில் மட்டும் தான் விளையாட வேண்டும், மற்ற தொடரில் விளையாடக் கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வாருங்கள்.**

**இலங்கை கிரிக்கெட் அணிக்கு வீரர்கள் தெரிவு செய்யப்படுவது எப்படி என்ற விபரம் பொது வெளீல் பகிரப்படுவதில்லை. அறிமுகமாகும் கிரிக்கெட் வீரர்கள் எதிர்பார்ப்பைப் பூர்த்தி. உலகக்கிண்ணப் போட்டியில் அறிமுகமான நியூஸ்லாந்து வீரர் ரச்சின், இந்திய ஜாம்பவான் சச்சின் போன்றவர்களின் சாதனைகளை தகர்க்கிறார்.**

**கிரிக்கெட்டுக்காக தம்மை அர்ப்பணிப்பவர்களின் கையில் இலங்கை கிரிக்கெட் கையளிக்கப்பட வேண்டும்.**

# நுவரெலியாவில் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்

202 வருடங்கள் பழமையான நுவரெலியா தபால் நிலையத்தில் நேற்று (9) 3,000 ற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்றுகூடி, பிரிட்டிஷ் ராஜ் நினைவுச்சின்னத்தை விற்க எடுக்கப்படும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.




இலங்கை மக்களின் நேசத்துக்குரிய சொத்தாக தபால் திணைக்களத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், அதனை ஹோட்டல் ஒன்றில் ஒப்படைக்கும் முடிவை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். அவர்கள் ஒரு மாற்றுத்தீர்வை முன்வைத்து வரலாற்றுக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் அதே வேளையில், தபால் அலுவலகத்திற்குப் பின்னாலுள்ள சுமார் 30 பேர் நிலத்தை ஹோட்டல் திட்டத்திற்காக ஒதுக்கலாம் என்று பரிந்துரைத்தனர். இது, நுவரெலியாவை சர்வதேச பார்வையாளர்களுக்குக் காண்பிக்கும் போது நாடு ஊக்குவிக்கும் 'லிட்டில் இங்கிலாந்தின்' நீடித்த அழகிற்கு பங்களிக்கும் என்று அவர்கள் வாதிட்டனர்.

நுவரெலியா நகரின் மையப்பகுதியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதையடுத்து, அனைத்து வர்த்தக நிறுவனங்களும் மூடப்பட்டன. இந்தப் போராட்டத்தால் சுமார் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# மாணவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் கோரிக்கை

அரசாங்கம் அடக்கி ஒடுக்கி அடிபணியவைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில் நாம் எமக்குள்ளே பிளவுபட்டு நிற்காது பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனநாயக ரீதியில் போராடும் மாணவர்களினதும் ஏனையவர்களினதும் செயற்பாடுகளை அச்சுறுத்தும் அரச படைகள் மூலம் அடக்கும் நடவடிக்கையாகவே நாம் பார்க்கின்றோம். இதனை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் எதிர்காலத்தில் முன்னெடுக்கக்கூடாது என கோருவதோடு, கைதுசெய்யப்பட்டு வழக்குப்பதியப்பட்ட மாணவர்கள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டி நிற்கின்றோம்.

பொருளாதார நெருக்கடி, ஜனநாயக நெருக்கடி என பல நெருக்கடிகளை நாட்டுமக்கள் எதிர்நோக்கும் இன்றைய காலச் சூழலில் நியாயத்திற்காகவும், உரிமைக்காகவும் போராடுபவர்களையும் சமூகச் செயற்பாட்டாளர்களையும் தொழிற்சங்கவாதிகளையும் மக்களையும் பாசிச செயற்பாடுகளின் மூலம், அரசாங்கம் அடக்கி ஒடுக்கி அடிபணியவைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் நிலையில் நாம் எமக்குள்ளே பிளவுபட்டு நிற்காது பல்கலைக்கழக சமூகமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும் என்பதனை பல்கலைக்கழக சமூகத்தில் ஒரு அங்கம் என்ற ரீதியில் வலியுறுத்தி நிற்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அல்வாயில் மூதாட்டி கொலை மூவர் கைது

அல்வாய் கிழக்கில் கடந்த ஒக்ரோபர் 5 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்ட மூதாட்டி கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளதாக வைத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதால் சந்தேகத்தின் பேரில் நேற்று மூவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர்.

மூதாட்டியை பராமரித்து வந்த இருவர் .வீட்டு வேலையாள் அடங்கலாக மூவரை சந்தேகத்தின் அடிப்படையில் நெல்லியடி பொலிஸார் நேற்று (9) கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. கடந்த சில நாட்களாக மசகு எண்ணெயின் விலை அதிகரித்து வந்த நிலையில் தற்போது சற்று வீழ்ச்சியடைந்துள்ளது.

சர்வதேச சந்தையில், WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 75.53 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.1 அமெரிக்க டொலராக வீழ்ச்சி அடைந்துள்ளது.

# ஹிக்கடுவ கடலில் வெளிநாட்டவர் பலி

5 ஹிக்கடுவ, வெவெல் கொட கடல் பகுதியில் நேற்று வியாழக்கிழமை போலந்து நாட்டு சுற்றுலாப்பயணி ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுடன் அவர் நேற்று பிற்பகல் அப்பகுதியில் டைவிங் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கும் போது ஏற்பட்ட உபாதை காரணமாக கரைக்கு கொண்டு வரப்பட்டு ஆராய்ச்சிகந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் ஹிக்கடுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சதித் திட்டத்தால் இலங்கை தோல்வியடைந்தது


உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இலங்கை அணி எதிர்கொண்ட மிக மோசமான தோல்விக்கு, அணிக்கு வெளியே இருந்த சதித்திட்டமே காரணம். இது தொடர்பான அனைத்துத் தகவல்களும் இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்று கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க தெரிவித்தார். போட்டியில் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

2023 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி விளையாடிய 9 போட்டிகளில் இரண்டு போட்டிகளில் மாத்திரமே வெற்றி கொண்ட நிலையில் 7 போட்டிகளில் படு மோசமாக தோல்வியடைந்தது.

# ஜனநாயகத்திற்கு மரண அடி மஹிந்த தேசப்பிரிய

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதில் எல்லை நிர்ணயக்குழுவின் அறிக்கை எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மக்கள் பிரதிநிதிகளை நியமிக்காமல் அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ் மாகாண சபைகளைத் தொடர்ந்தும் நடத்துவது நாட்டின் ஜனநாயகத்திற்கான மரண அடி என்று அந்தக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்



கும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை அரசியலமைப்பில் திருத்தம் செய்வதைத் தவிர வேறு எந்த வகையிலும் பிற்போடுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்த முடியாது. தாமதிக்கவும் முடியாது. 2024 செப்ரெம்பர் 17 ற்கும், ஒக்டோபர் 17 ற்கும் இடையில் நடாத்தியே ஆக வேண்டும் என்றார்.

# வெள்ளத்தால் 11,586 பேர் புத்தளத்தில் பாதிப்பு

நாடெங்கும் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழையினால் வான் கதவுகள் திறக்கப்பட்டமை, வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் 11, 586 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ். பி.ஹேரத் தெரிவித்தார்.

தெதுரு ஓயா, ராஜாங்கனை, இகினிமிட்டிய, அங்கமுவ, தப்போவ நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டதாலும், கடும் மழை காரணமாகவும் மாவட்டத்திலுள்ள கால்வாய்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் நிரம்பி வழிவதாலும் பல இடங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாகவும் அத்துடன், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளின் தலைமையீட்டினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, புத்தளம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்த நிலைமை படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படுவதாகவும் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் குறிப்பிட்டார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 2389 குடும்பங்களைச் சேர்ந்த 8430 பேர் தொடர்ச்சியாக அவதிப்பட்டு வருவதாகவும் நாத் தாண்டிய, ஆராச்சிக்கட்டுவ, முந்தல், புத்தளம், மாதம்பை, வனாத்தவில்லு, மஹவெவ, தங்கொட்டுவ, கற்பிட்டி, வென்னப்புவ, பல்லம மற்றும் மஹகும் புக்கடவல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# காஸாவில் பலியானவருக்கு இழப்பீடு வழங்கப்படும்

இஸ்ரேல் - ஹமாஸ் போர் மோதல்களால் உயிரிழந்த சுஜித் பண்டாரவுக்குச் சாத்தியமான அனைத்து இழப்பீடுகளையும் கொடுப்



பனவுகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு இஸ்ரேல் அரசாங்கம் வழங்கி வரும் அனைத்து இழப்பீடுகள் மற்றும் கொடுப்பனவுகளை சுஜித் அவர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு பணியகம் ஏற்கெனவே தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# பனை உற்பத்தி ஏற்றுமதியால் அதிக வருமானம்





ஒக்ரோபர் மாதம் வரை பனை பொருட்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் 78 மில்லியன் ரூபா வருமானம் நாட்டிற்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச சந்தையில் பனை வெல்லம், தேன் உள்ளிட்ட உற்பத்திகளுக்கு அதிக கேள்வி நிலவுவதாக விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் பனை தொடர்பான உணவு கைத்தொழில் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள் உற்பத்திகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டங்களை தயாரிக்குமாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# 2024 இல் உணவுப் பண வீக்கத்தை குறைக்க முடியும்

உணவுப் பணவீக்கம் அடுத்த ஆண்டில் மேலும் குறைவடையும் எனவும் 2024 ஆம் ஆண்டில் உணவுப் பொருட்களின் விலையை எந்தளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்பதைப் புரிந்து கொள்வதற்காக உணவு உற்பத்தி தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாகவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நலின் பெர்னாண்டோ ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே தெரிவித்துள்ளார்.



# இலங்கையை இலகுவாக வீழ்த்திய நியூஸ்லாந்து




பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் இலங்கைக்கு எதிரான முக்கியமான போட்டியில் 5 விக்கெட்களினால் வெற்றி பெற்ற நியூஸ்லாந்து அரை இறுதியில் விளையாடும் சந்தர்ப்பதைக் கெட்டியாகப் பிடித்துள்ளது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸ்லாந்து முதலில் பந்து வீச்சைத் தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 46.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 171 ஓட்டங்கள் எடுத்தது. 23.2 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்த நியூஸ்லாந்து 172 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது.

இலங்கை அணியின் குஷல் பெரேரா மட்டும் அதிரடியாக விளையாடி அரைசதம் அடித்தார். 51 ஓட்டங்கள் எடுத்த அவர் ஐந்தாவது விக்கெட்டாக வீழ்ந்தார். 8.2 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 38 ஓட்டங்கள் சேர்த்தார். நியூஸ்லாந்து தரப்பில் ட்ரெண்ட் பவுல்ட் 3 விக்கெட்டும், பெர்குசன், சான்ட்னர், ரச்சின் ரவீந்திரா ஆகியோர் தலா 2 விக்கெட்களும் எடுத்தனர்.

**சச்சினை முறியடித்த ரச்சின்:**


நியூஸ்லாந்துக்கு எதிரான போட்டியில் நியூஸ்லாந்து அணி வீரர் ரச்சின் ரவீந்திரா 34 பந்துகள் களத்தில் நின்று 3 பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் என மொத்தம் 42 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் 50 ஓவர் உலகக்கிண்ணத் தொடரில் 25 வயதை எட்டுவதற்கு முன்பு அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் என்ற சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்தார் நியூஸ்லாந்து அணி வீரர் ரச்சின் ரவீந்திரா. இலங்கை அணிக்கு எதிரான போட்டிக்கு முன்பு வரை 8 இன்னிங்ஸ்கள் விளையாடி 74.71 சராசரியில் 523 ஓட்டங்கள் எடுத்திருந்தார். ரச்சின் ரவீந்திரா மொத்தம் 565 ஓட்டங்கள் எடுத்திருக்கிறார். இது அவர் விளையாடிய உலகக்கோப்பைத் தொடரின் 9 ஆவது இன்னிங்ஸில் நடந்துள்ளது. 1996 உலகக்கிண்ணத்தில் சச்சின் தன்னுடைய 23 வயதுக்குள் 523 ஓட்டங்கள் அடித்திருந்ததே முந்தைய சாதனையாகும். 2019 உலகக்கிண்ணத்தில் ஜானி பேர்ஸ்டோ தன்னுடைய அறிமுகத்தொடரில் 532 ஓட்டங்கள் எடுத்ததே முந்தைய சாதனையா கும்.

**நியூஸ்லாந்துக்கு தொல்லை கொடுத்த தீக்சனா**

9 ஆவது இடத்தில் களமிறங்கிய சுழல் பந்து வீச்சாளரான மஹீஸ் தீக்சனா 11 ஆவதாக வந்த மதுசங்காவுடன் ஜோடி சேர்ந்து நியூஸ்லாந்துக்கு தொல்லை கொடுக்கும் ஆட்டத்தை வெளிப்படுத்தினார். குறிப்பாக மிகவும் மெதுவாக விளையாடிய இந்த ஜோடி 33 ஆவது ஓவரில் சேர்ந்து 47 ஓவர்கள் வரை நியூஸ்லாந்துக்கு மிகப் பெரிய தொல்லையைக் கொடுத்து, 10 ஆவது விக்கெட்டுக்கு 43 ஓட்டங்கள் பார்ட்னர்ஷிப் அமைத்து இலங்கையை 171 ஓட்டங்கள் குவிக்க உதவியது.

மதுசங்கா 19 (48) ஓட்டங்களில் அவுட்டானாலும் மறுபுறம் கடைசி வரை அவுட்டாகாமல் நியூஸ்லாந்துக்கு சவாலை கொடுத்த மஹீஸ் தீக்சனா 3 பவுண்டரியுடன் ஆட்டமிழக்காமல் 38* (91) ஓட்டங்கள் எடுத்தார். 15.1 ஓவர்கள் அதாவது, 91 பந்துகளை எதிர்கொண்ட அவர் உலகக்கிண்ண வரலாற்றில் ஒரு போட்டியில் 9 ஆவது இடத்தில் களமிறங்கி அதிக பந்துகளை எதிர்கொண்ட வீரர் என்ற தனித்துவமான உலக சாதனை படைத்துள்ளார். 20 வருடங்களுக்கு முன்பாக 2003 உலகக்கிண்ணத்தில் அவுஸ்திரேலிய வீரர் ஆன்ட்டி பைக்கல் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 9 ஆவது இடத்தில் களமிறங்கி 83 பந்துகளை எதிர்கொண்டு 64 ஓட்டங்கள் எடுத்ததே முந்தைய சாதனையாகும். அத்துடன் ஒருநாள் கிரிக்கெட்டில் 9 ஆவது இடத்தில் களமிறங்கி அதிக பந்துகளை எதிர்கொண்ட 2 ஆவது வீரர் என்ற பெருமையும் அவர் பெற்றார். இதற்கு முன் 2005 ஆம் ஆண்டு நியூஸ்லாந்துக்கு எதிராக ஜெய் பிரகாஷ் யாதவ் 92 பந்துகள் எதிர்கொண்டதே இந்திய சாதனையாகும்.




# 450 மில்லியன் பார்வையாளர்களை கடந்த உலகக்கிண்ணப் போட்டி

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி இந்தியாவில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. ரசிகர்களின் வரவேற்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில், இந்த தொடரின் 34ஆவது லீக் ஆட்டத்தின் முடிவின் படி இதுவரை 450 மில்லியன் பார்வைகளை இந்தத் தொடர் கடந்துள்ளது. மேலும் கடந்த 2019 ஆம் ஆண்டைக் காட்டிலும் இது 10 சதவீதம் அதிகம் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் விளையாடிய போட்டி, ஒக்ரோபர் 14 ஆம் திகதி நடைபெற்றது. குஜராத் மாநிலம், அகமதாபாத் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தை தொலைக்காட்சி வாயிலாக, நேரலையாக சுமார் 76 மில்லியன் பார்வையாளர்களும் அதே போல டிஜிட்டலில் 35 மில்லியன் பார்வையாளர்களும் கண்டுகளித்துள்ளனர்.

இந்த உலகக் கோப்பை தொடரில் இந்தியா கிட்டத்தட்ட 8 போட்டிகள் விளையாடி முடித்துள்ளது. இதில் 8 போட்டிகளிலும் இந்திய அணிதான் வெற்றி பெற்றுள்ளது. அதேநேரம் இந்திய அணி விளையாடிய அனைத்து போட்டிகளும் 50 மில்லியன் பார்வைகளைக் கடந்துள்ளது.

மேலும், முன்பைவிட கிரிக்கெட் பார்ப்பவர்களின் எண்ணிக்கை 18 சதவீதம் அதிகரித்துள்ளது. அதாவது, 2019 ஆம் ஆண்டு உலகக் கோப்பை தொடரை பார்வையிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கையை விட இந்த உலகக் கோப்பை தொடரைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை தற்போது வரை 18 சதவீதம் அதிகரித்துள்ளதாக Broadcast Audience Research Council தெரிவித்திருக்கிறது.

இந்த உலகக் கோப்பை தொடரின் 34ஆவது லீக் போட்டியின் முடிவின் படி 450 மில்லியன் பார்வைகளைப் பெற்றிருக்கிறது. அதேநேரம், இன்னும் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் நடைபெற உள்ளதால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும், மேலும் இந்திய அணி இறுதிப் போட்டியில் விளையாடும் பட்சத்தில் டிஜிட்டலில் பார்க்கும் பார்வையாளர்களின் எண்ணிக்கை வேகமாக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக இந்திய அணி வீரர் விராட் கோலி சதம் அடித்த போட்டிகள் அதிக பார்வைகளைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 10.11.2023 அன்று வெளியிடப்பட்டது.